# யூன் – 12 - திங்கள்
## புனித பங்குந்தோ யோவான்
## “என்னுடன் ஆண்டவரை பெருமைப்படுத்துங்கள்“ – தி.பா 34 : 3

**முதல் வாசகம் : 2 கொரிந்தியர் 1 – 1 – 7**

கொரிந்து நகரில் உள்ள கடவுளின் திருச்சபைக்கும் அக்காயா மாநிலம் முழுவதிலும் வாழும் இறைமக்கள் அனைவருக்கும் கடவுளின் திருவுளத்தால் கிறிஸ்து இயேசுவின் திருத்தூதனாயிருக்கும் பவுலும் சகோதரராகிய திமொத்தேயுவும் எழுதுவது: நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் உங்களுக்கு அருளும் அமைதியும் உரித்தாகுக!. நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் தந்தை இரக்கம் நிறைந்த கடவுள். அவரே ஆறுதல் அனைத்துக்கும் ஊற்று் அவரைப் போற்றுவோம். கடவுள் எங்களுடைய இன்னல்கள் அனைத்திலும் எங்களுக்கு ஆறுதல் அளிக்கிறார். நாங்களே கடவுளிடமிருந்து ஆறுதல் பெற்றுள்ளதால் பல்வேறு இன்னல்களில் உழலும் மற்ற மக்களுக்கும் ஆறுதல் அளிக்க எங்களால் முடிகிறது. கிறிஸ்து நமக்காக மிகுதியாகத் துன்புற்றார் அது போல அவர் வழியாக நாம் மிகுதியான ஆறுதலும் பெறுகிறோம். ஆகவே நாங்கள் துன்புறுகிறோம் என்றால் அது உங்கள் ஆறுதலுக்காகவும் மீட்புக்காகவும்தான் நாங்கள் ஆறுதல் பெறுகிறோம் என்றால் அது உங்கள் ஆறுதலுக்காகவே. நாங்கள் துன்பங்களைப் பொறுத்துக் கொள்வதைப் போல நீங்களும் உங்கள் துன்பங்களைத் தளராமனத்துடன் பொறுத்துக் கொள்வதற்கு இந்த ஆறுதல் ஆற்றல் அளிக்கிறது. நீங்கள் எங்கள் துன்பத்தில் பங்கெடுத்ததைப்போல் எங்களுடைய ஆறுதலிலும் பங்குபெறுவீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். நீங்கள் இவ்வாறு செய்வீர்கள் என உறுதியாக எதிர்நோக்கி இருக்கிறோம்.

**பதில்பாடல் :** ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள்

**நற்செய்தி : மத்தேயு 5 : 1 – 12**

அக்காலத்தில், இயேசு மக்கள் கூட்டத்தைக் கண்டு மலைமீது ஏறி அமர, அவருடைய சீடர் அவரருகே வந்தனர். அவர் திருவாய் மலர்ந்து கற்பித்தவை. ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது. துயருறுவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர். கனிவுடையோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர். நீதிநிலைநாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் நிறைவுபெறுவர். இரக்கமுடையோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர். தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர். அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர். நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது. என் பொருட்டு மக்கள் உங்களை இகழ்ந்து, துன்புறுத்தி, உங்களைப் பற்றி இல்லாதவை பொல்லாதவை யெல்லாம் சொல்லும்போது நீங்கள் பேறுபெற்றவர்களே! மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள்! ஏனெனில் விண்ணுலகில் உங்களுக்குக் கிடைக்கும் கைம்மாறு மிகுதியாகும். இவ்வாறே உங்களுக்கு முன்னிருந்த இறைவாக்கினர்களையும் அவர்கள் துன்புறுத்தினார்கள்” என்றார்.

**தியானம்:** இன்றைய நற்செய்தியில் ஆண்டவர் இயேசு யாரெல்லாம் பாக்கியவான்கள் எனக் குறிப்பிடுகின்றாரென நாம் மிகவும் சுலபமாகக் கூறிவிடலாம். எனினும் இன்றைய நற்செய்தியை மிக ஆழமாக நாம் பார்க்கும்போது நற்செய்தியாளர் புனித மத்தேயுவின் பார்வையில் பாலைவன அனுபவத்தின் பின்னர் ஆண்டவர் இயேசுவின் இரக்கமும், அன்பும் நிறைந்த வல்லமையின் வெளிப்பாடாகவே “மலைப்பொழிவு” அமைந்துள்ளதாகவே நாம் கருத இடமிருக்கின்றது. ஏனெனில் இந்தியாவிற்கு சுதந்திரம் பெற்றுக்கொடுத்த அகிம்சா இயக்கத்தின் தந்தையான மகாத்மா காந்தி தனது வாழ்க்கையை மாற்றியமைத்தது “ஆண்டவர் இயேசுவின் மலைப்பொழிவு” என்று கூறியுள்ளதோடு, “கிறிஸ்துவை நேசிக்கிறேன் கிறிஸ்தவர்களை அல்ல” என்றும் கூறியுள்ளார். “மலைப்பொழிவு” நற்செய்தியில் ஆண்டவர் இயேசு எட்டுவிதமான: “ஏழையரின் உள்ளத்தோர்”, “துயருறுவோர்”, “கனிவுடையோர்”, “நீதிநிலைநாட்டும் வேட்கை கொண்டோர்”, “இரக்கமுடையோர்”, “தூய்மையான உள்ளத்தோர்”, “அமைதி ஏற்படுத்துவோர்”, “நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர்”, மற்றும் “என்பொருட்டு மக்களால் இகழ்ந்து துன்புறுத்தப் படுவோர் பேறுபெற்றவர்கள் அவர்கள் நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்வர்” (மத்தேயு5:3-11) எனவும் திருவாய் மலர்ந்துள்ளார். ஆதியிலே இறைவன் சீனாய் மலையில் மோசே வழியாகப் (விடுதலைப் பயணம்20) பத்துக் கட்டளைகளைக் கொடுத்து இஸ்ராயேல் மக்களை “பேறுபெற்றவர்களாக” வாழ அழைத்தது போன்றே ஆண்டவர் இயேசுவின் மலைப்பொழிவும் அமைந்துள்ளது. எனினும் பத்துக் கட்டளைகளுக்கு அமைவாகவோ, அல்லது மலைப்பொழிவிற்கு அமைவாகவோ நாம் வாழுகின்றோமா?